RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 170 ஜூன்.27 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஓட்டம் : முதல்வர் விஜய் பங்கேற்பு

சென்னை: ஜூன்.27-

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சென்னையில் ‘ஸ்டார்ட் Run ஸ்டாப் Drugs’ போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்து, அதில் தானும் பங்கேற்றார்.

சென்னை காமராஜர் சாலையில் இந்த ஓட்டம் தொடங்கியது. இதில் முதல்வர் விஜய் பங்கேற்றார். அவருடன் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, புஸ்ஸி ஆனந்த், மரிய வில்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் அரசின் உயர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள், தடகள ஆர்வலர்கள் என பலர் பங்கேற்றனர்.

இந்த ஓட்டத்தை தொடங்கி வைப்பதற்கு முன்னதாக போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து விழிப்புணர்வு வாசகத்தை முதல்வர் விஜய் எழுதினர். தொடர்ந்து போதைப் பழக்கத்துக்கு எதிரான உறுதிமொழியை இந்த ஓட்டத்தில் பங்கேற்றவர்கள் எடுத்துக் கொண்டனர். அதனை முதல்வர் விஜய் வாசித்தார்.

“போதைப்பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்துக்கு ஆளாகமாட்டேன்; மேலும், எனது குடும்பத்தினரையும் நண்பர்களையும் போதைப்பழக்கத்துக்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரை வழங்குவேன்;



போதைப் பழக்கத்துக்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து, அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாக தருவேன். போதைப்பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான நடவடிக்கையின் மூலம் போதைப்பொருளை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணை நிற்பேன்; மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்” என்று உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த ஓட்டத்தை கொடியசைத்து முதல்வர் விஜய் தொடங்கி வைத்து, ஓட்டத்தில் பங்கேற்றார். அப்போது அவருடன் அமைச்சர்கள், அதிகாரிகள், காவல் துறையினர், விளையாட்டு வீரர்கள் என இந்த ஓட்டத்தில் அனைவரும் பங்கேற்றனர்.

முதல்வர் பதக்கம் அறிவிப்பு

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மாநிலத்தில் போதைப் பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறந்து விளங்கிய காவல் அதிகாரிகளுக்கு, ‘போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு சிறப்பு பணிக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கம்’ அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டு முதல் இந்த பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், முதல்வர் விஜய், 2026ம் ஆண்டிற்கான பதக்கங்களை 14 காவல் அதிகாரிகள், காவல் ஆளிநர்களுக்கு வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

## திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியா? : திமுக தலைவர் ஸ்டாலின் பதில்

சென்னை: ஜூன்.27-

திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டி யிடுவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என்று திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மு.க.ஸ்டாலின், “இடைத்தேர்தலில் போட்டி யிடுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை” என்றார்.

சமீபத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியபோது, “சட்டப்பேர வையில் ‘எங்கே உங்க அப்பாவை காணோம்’ என்று திமுக தலைவரை குறிப்பிட்டு முதல்வர் விஜய் பேசி இருக்கிறார். மிக விரைவாக சட்டப்பேர வையில் அவர் பொறுப் பேற்பார். அது உறுதி” எனத் தெரிவித்திருந்தார்.

தமிழகத்தில் அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்த மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம், அம்பாசமுத்திரம், விராலிமலை தொகுதிகள் மற்றும் முதல்வர் விஜய் ராஜினாமா செய்த திருச்சி கிழக்கு ஆகிய 6 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியுள்ளதால், மு.க.ஸ்டாலின் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது கவனிக்கத்தக்கது.

## “அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு மாற்றத்தை உருவாக்க வந்தவர் முதல்வர் விஜய்” செங்கோட்டையன்

கோபி, ஜூன்.27-

“அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு தமிழகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்க இயற்கை கொடுத்த கொடையாக முதல்வர் விஜய் இருக்கிறார்” என அமைச்சர் செங் கோட்டையன் தெரி வித்துள்ளார்.



கோபியில் நடந்த நிகழ்ச் சியில் பேசிய அமைச்சர் செங்கோட்டையன், “இன்று ஜோசப் விஜய் என்று சொன்னாலே எல்லோரும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு தமிழகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்க இயற்கை கொடுத்த கொடையாக முதல்வர் விஜய் இருக்கிறார். இங்கு வந்துள்ள நீங்கள் தான் என்னை வாழ வைத்தீர்கள். நீங்கள் தான் 10 முறை இந்த தொகுதியில் என்னை வெற்றிபெற வைத்தீர்கள்.

செங்கோட்டையன் எங்கே செல்கிறார் என எல்லோரும் என்னை கேலி பேசினார்கள். நான் எம்ஜிஆரோடு பயணம் செய்தேன், அவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். நான் ஜெயலலிதாவோடு பயணம் செய்தேன், அவரும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். இப்போது விஜய்யுடன் இணைந்தேன், இன்று ஆட்சி மாற்றப்பட்டிருக்கிறது. 60 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தவர்கள் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளார்கள்.

யாராக இருந்தாலும் இனி எதிர்க்கட்சி வரிசையில் தான் அமர முடியும். முதல்வர் விஜய் இருக்கும் வரை ஆளும் கட்சியாக யாராலும் வர முடியாது. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு உலகத் தமிழர்களின் இதயங்களில் வாழ்பவர் விஜய். இன்று நிதி நெருக்கடியில் மாநிலம் இருந்தாலும், மக்களுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் முதல்வர் விஜய்” என்றார்.

## தி.மு.க., தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த தே.மு.தி.க., பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்!



சென்னை, ஜூன்.27-

சென்னை ஆழ்வா பேட்டையில் உள்ள இல்லத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சந்தித்தார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த தேமுதிக பொருளாளரும் எம்.பி.யுமான சுதீஷ்; மரியாதை நிமித்தமாக நேற்று சந்தித்த நிலையில் பிரேமலதா விஜயகாந்த் X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## “டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழிற்சாலை அமைய வாய்ப்பு” : அமைச்சர் வினோத் தகவல்

கும்பகோணம்: ஜூன்.27-

“காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம்” என்று வேளாண் அமைச்சர் வினோத் கூறியுள்ளார்.

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா இன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில், அலுவலகத்தை தூய்மைப் பணியாளுடன் இணைந்து வேளாண் துறை அமைச்சர் வினோத் ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். மேலும், அலுவலகத்துக்குள் இருந்த முதல்வர் விஜய்யின் உருவப் படத்தை வணங்கினார்.



தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் வினோத் கூறியது: ”எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த கும்பகோணம் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னை உங்கள் வீட்டுப் பிள்ளையாக கருதி என்னை எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளேன். அதற்காக நான் கடமைப்பட்டுள்ளேன். உங்களின் தேவையை அனைத்தையும் பூர்த்தி செய்வேன் என சத்தியமாக உறுதி அளிக்கிறேன்.

கும்பகோணத்தை தனி மாவட்டமாக அறி விப்பதற்கு முதல்வரிடம் தெரிவித்து விரைவில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். திருவிடைமருதூர் தொகுதியில் வேளாண் கல்லூரி கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில், எந்தவொரு அரசும் ஆட்சிக்கு வந்த 40 நாட்களுக்குள் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு, பயிர்க் கடன் தள்ளுபடி செய்தது இல்லை. ஆனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 40 நாட்களிலேயே பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்துள்ளோம்.

விரைவில் முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து முதல்வர் ஆய்வு செய்து, அறிவிப்பை வெளி யிடுவார். காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது, அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம்.

வாழை சாகுபடிக்கு காப்பீடு செய்வது தொடர்பாக இந்த வாரம் ஆலோசனை கூட்டம் நடத்த உள்ளோம். அனைத்து துறையில் இருந்தும் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும். பொறுத்திருந்து பாருங்கள்.

தமிழகத்தில் விவசாயத்தை முன்னோடியாக கொண்டுவர வேண்டும் என்பதே முதல்வரின் எண்ணம். விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை வளர்ச்சிப் பாதை கொண்டு செல்ல வேண்டும் என அவர் முயற்சித்து வருகிறார்.

காவிரி நீர் கண்டிப்பாக வரும். எல் நினோவால் டெல்டா மாவட்டங்களுக்கு பாதிப்பு இருக்காது. அதே நேரத்தில் எந்த வகையான பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டும் என ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றோம். இதேபோல் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அது சார்ந்த திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்தப்படும்” என்று அமைச்சர் வினோத் கூறினார்.

தொடர்ந்து, போதை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு மற்றும் தூய்மை பணியாளர், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## என்எல்சி பங்குகளை விற்பனை செய்யும் முடிவை கைவிட மத்திய அரசுக்கு மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.27-

என்எல்சியின் 3 சதவீத பங்குகளை விற்பனை செய்யும் முடிவை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் (என்.எல்.சி இந்தியா) பங்குகளை செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 3 சதவிட்வரையிலான பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்ய எடுத்துள்ள முடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

என்எல்சி நிறுவனம் தமிழகத்தின் நெய்வேலியை தலைமையிடமாக கொண்டு இயங்கும் நவரத்தின பொதுத் துறை நிறுவனமாகும். மாநில அரசின் நிர்வாகத்தின் ஒத்துழைப்போடும், தமிழக மக்களின் ஆதரவோடும் பல தசாப்தங்களாக இயங்கி வருகிறது.

தமிழகத்தின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மாநிலத்தின் பொருளாதார கட்டமைப்பு வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழகத்தின் தேவையைத் தாண்டி கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி போன்ற மாநிலங்களின் மின் தேவையையும் பூர்த்தி செய்து வருவதோடு இந்நிறுவனத்தின் கிளைகள் இந்தியாவில் சில இடங்களில் உள்ளன.

இந்நிறுவனத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிறுவனம் தொடர்ந்து லாபம் ஈட்டி வரும் நிறுவனமாகும். நிகழாண்டு ரூ.3,670 கோடி லாபத்தை ஈட்டி மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இப்படி சிறப்பாக செயல்படும் நிறுவனத்தின் மூன்று சதவீத பங்குகளை மத்திய அரசு விற்பது என்பது பொதுத் துறை நிறுவனங்களை சீரழிக்கும் செயலாகும்.

மத்திய அரசு நாட்டில் இயங்கும் நெடுஞ்சாலைகள், ரயில்வே நிலையங்கள், விமான நிலையங்கள், வங்கி, இன்சூரன்ஸ் என லாபம் ஈட்டி வரும் நவரத்தின பொதுத் துறை நிறுவனங்களை தேசிய பணமயமாக்கல் திட்டம் என்ற பெயரில் தனியாருக்கு தாரை வார்த்து வருவதன் தொடர்ச்சியாகவே தற்போது என்எல்சி நிறுவனத்தின் 3 சதவீத பங்குகளை மத்திய அரசு விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. என்எல்சியின் பங்குகளை விற்பனை செய்யக் கூடாது என முதல்வர் விஜய், மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது நல்ல அம்சமாகும்.

மத்திய அரசு தொடர்ந்து தமிழகத்துக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்ய மறுப்பு, கல்வி, மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி பறிப்பு, புதிய கல்விக் கொள்கை திணிப்பு, நீட் தேர்வு என தமிழகத்தையும், தமிழக மக்களையும் வஞ்சித்து வரும் நிலையில் தற்போது நவரத்தின பொதுத்துறை நிறுவனமான என்எல்சி பங்குகளையும் விற்பனை செய்வது என்பது தமிழக மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும்.

எனவே, மத்திய அரசு 3 சதவீத என்எல்சி பங்குகளை விற்பனை செய்யும் முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துவதோடு, மத்திய அரசின் இந்த மக்கள் விரோத நடவடிக்கைக்கு எதிராக பொது மக்களும், ஊழியர்களும் தங்களது வலுவான கண்டனக் குரலை எழுப்புமாறும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது” என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்.

# விவசாயிகளுக்கான மதிப்பு கூட்டுதல் பயிற்சி





நீலகிரி, ஜூன்.27-
நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை, குன்னூர் வட்டாரம் விரிவாக்க சீரமைப்புத்திட்டம் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கான பயிற்சியானது மேலூர் கிராமத்தில் தோட்டக்கலை துணை இயக்குநர் ஜெயலட்சுமி தலைமையின் கீழ் நடைபெற்றது. வேளாண் விளைப்பொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் போது கிடைக்கும் இலாபத்தினை விட அதனை மதிப்பு கூட்டி விற்பனை செய்யும் போது இலாபம் அதிகரித்து கிடைக்கும் என கூறினார். தேயிலையில் இலை அரும்புகளை மட்டும் எடுத்து பதப்படுத்தி சில்வர் டிப்ஸ் ஆக சிறப்பாக விற்பனை செய்யும் போது ஒரு கிலோ ஒன்றிற்கு 6000 வரை விலைபோகிறதென்றும் மேலும் அங்கக முறையில் சாகுபடி செய்யும் அந்த விளைப்பொருளை நேரடியாகவும் மதிப்பு கூட்டியும் விற்பதன் மூலம் இலாபம் அதிகரிக்கும் என்றார்.தோட்டக்கலை உதவி இயக்குநர் ம.விஜியலட்சுமி தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து விளக்கினார். வேளாண் அறிவியல் நிலையம், உதகையிலிருந்து வருகை புரிந்த மணிவாசகன் வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விளைப்பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்யும் வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

மேலும் இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான்போஸ்கோ அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். இப்பயிற்சியில் மேலூர் வார்டு முன்னால் கவுன்சிலர் பாரதி மற்றும் 40திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சியின் நிறைவில் அப்பகுதியிலுள்ள காய்கறி மற்றும் தேயிலை தோட்டங்களை பார்வையிட்டு பூச்சி மற்றும் நோய்களை கண்டறிந்து அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை எடுத்து கூறினார்.

# உதகை எச் ஏ டி பி மைதானத்தில் போதை பொருள் ஒழிப்பு திட்ட விழிப்புணர்வு ஓட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



உதகை, ஜூன்.27-
நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், உதகை எச் ஏ டி பி விளையாட்டு மைதானத்தில் போதை பொருள் ஒழிப்பு திட்ட விழிப்புணர்வு ஓட்டத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்தார்.தமிழ்நாடு முதலமைச்சர் தொலை நோக்குப் பார்வையின் அடிப்படையில், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் போதை பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கும் வகையிலும், இன்றைய தினம் போதை பொருள் ஒழிப்பு திட்ட விழிப்புணர்வு 6 கிலோ மீட்டர் தூர ஓட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள், அலுவலர்கள், என் சி சி, என் எஸ் எஸ் சாரணர், வழிகாட்டிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த போதை பொருள் ஒழிப்பு திட்ட விழிப்புணர்வு ஓட்டமானது எச்ஏடிபி திறந்து வெளி விளையாட்டு மைதானத்தில் தொடங்கி உதகை மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்று மீண்டும் எச்ஏடிபி திறந்து வெளி விளையாட்டு மைதானம் வரை வந்து நிறைவடைந்தது.முன்னதாக, போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழியினையும், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்.இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிருந்தா, உதகை வருவாய் கோட்டாட்சியர் டினுஅரவிந்த், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு அலுவலர் திருமதி இந்திரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தேனியில் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், விழிப்புணர்வு ஓட்டம் மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி

தேனி, ஜூன்.27-
தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இன்று உலக போதைப்பொருள் தடுப்பு தின சர்வதேச நாளையொட்டி போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், 'Start Run, Stop Drug – Anti Drug Run 2026' விழிப்புணர்வு ஓட்டம் மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் போதைப்பொருள் தடுப்பு குறித்த உறுதிமொழி மேற்கொண்டு, தொடர்ந்து Start Run, Stop Drug – Anti Drug Run 2026' விழிப்புணர்வு ஓட்டத்தை துவக்கிவைத்தார்கள். இதில் மாணவர்கள், இளைஞர்கள், தன்னார்வ அமைப்புகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 2000க்கும் மேற்பட்டோர் பங்கேற்று இத்தொடர் ஓட்டம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக பொதுமக்கள் பார்த்து போதைப்பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை அறியும் வண்ணம் பதாகைகள் ஏந்தி நிறைவாக விழிப்புணர்வு தொடர் ஓட்டம் மாவட்ட விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.இந்த விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ்களை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சபரி ஜங்கரன் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், உதவி ஆணையர் பஞ் சாபிகேசன், துணை காவல் கண்காணிப்பாளர் .சீராளன், மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் .மதியழகன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் தொழில்துறை அமைச்சர் செல்வி.ச.கீர்த்தனா தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் பாலகிருஷ்ணாரெட்டி (ஒசூர்),ராமச்சந்திரன் (தளி),முகுந்தன் (கிருஷ்ணகிரி), இளையராஜா (ஊத்தங்கரை),சீனிவாசன் (வேப்பனஹள்ளி) ஆகியோர் முன்னிலையில், நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.சி.அனிதா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.



# அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவரை சந்தித்த காவேரிப்பட்டினம் DMK Gen-Z

கிருஷ்ணகிரி, ஜூன்.27-
சென்னை அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் முதல்வரும், மாண்புமிகு கழகத் தலைவருமான அவர்களை, காவேரிப்பட்டினம் DMK Gen-Z குழுவினர் நேரில் சந்தித்தனர்.அப்போது, கடந்த 21.06.2026 அன்று காவேரிப்பட்டினத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற DMK Gen-Z Meet நிகழ்ச்சியின் புகைப்படங்கள், நிகழ்வு அறிக்கை மற்றும் அதன் சிறப்பம்சங்கள் ஆகியவற்றை கழகத் தலைவரிடம் வழங்கினர்.

அவற்றை ஆர்வமுடன் பார்வையிட்ட கழகத் தலைவர் அவர்கள், Gen-Z Meet நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்திய காவேரிப்பட்டினம் DMK Gen-Z குழுவினருக்கு மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார். திமுக மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைத்தலைவர் செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், திமுக நிர்வாகி தினேஷ், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சோயப் உஷேன், நகர ஐ டிவிங் செயலாளர் ஸ்ரீ தினேஷ், திமுக நிர்வாகி காமேஷ், நகர மாணவரணி துணை அமைப்பாளர் சிற்றரசன், அபி கவி கோவிந்தராஜ், நகர சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் அக்பர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மேலும், இளைஞர்களை கழகப் பணியில் அதிகளவில் ஈடுபடுத்தி, மக்கள் மத்தியில் கழகத்தின் கொள்கைகளையும் அரசின் சாதனைகளையும் கொண்டு செல்லும் பணியை இன்னும் தீவிரமாகவும் சிறப்பாகவும் மேற்கொள்ள வேண்டும் என ஊக்கமளித்து அறிவுறுத்தினார்.கழகத் தலைவரின் பாராட்டும் வாழ்த்தும், காவேரிப்பட்டினம் DMK Gen-Z குழுவினருக்கு புதிய உற்சாகத்தையும், கூடுதல் பொறுப்புணர்வையும் அளித்துள்ளதாக குழுவினர் தெரிவித்தனர்.

இந்நிகழ்வு, கழகத்தின் இளம் தலைமுறையினரின் செயல்பாடுகளுக்கு கிடைத்த முக்கிய அங்கீகாரமாக கருதப்படுகிறது.

"மீண்டு வருவோம்ஞ் மீண்டும் வருவோம்ஞ்" என்ற உறுதியுடன், கழகப் பணிகளை மேலும் சிறப்பாக முன்னெடுக்க காவேரிப்பட்டினம் DMK Gen-Z குழுவினர் உறுதியேற்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மைத்துறை சார்பாக, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ராஜா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) உமா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் (பொ) குணவதி,வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் நிர்மலதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியார் (வேளாண்மை) பா.ஏஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# ராணிப்பேட்டையில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான்

ராணிப்பேட்டை, ஜூன்.27-
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் அவர்கள் இராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உலக போதை ஒழிப்பு தினத்தையொட்டி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் "போதை இல்லா தமிழ்நாடு" என்ற உயரிய இலக்கினை வலியுறுத்தும் வகையில் "Start Run, Stop Drug, Anti-Drug Run2026 என்ற மாபெரும் விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்றவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் நி.கபில், மாவட்ட வருவாய் அலுவலர் சி.பேபி இந்திரா, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை கு.செல்வராசு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், முதன்மை கல்வி அலுவலர் மோகனா மற்றும் பலர் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் புதிய நியாயவிலைக்கடை மற்றும் ரூ.51 இலட்சம் சார்பில் கட்டப்பட்ட புதிய கட்டங்களை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்



நீலகிரி, ஜூன்.27-
தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி, நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவு துறையின் சார்பில் புதிய நடமாடும் நியாய விலைக்கடை மற்றும் ரூ.51 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை, கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து பார்வையிட்டார்.

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் , கூட்டுறவு துறையின் சார்பில், நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம் கடநாடு ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் தாவணெ பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் சுமார் 104 எண்ணிக்கையிலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில், நடமாடும் நியாயவிலை கடையினை திறந்து வைத்து அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். மேலும், இந்த நடமாடும் நியாயவிலைக்கடையின் மூலமாக மாதத்தில் முதல் மற்றும் கடைசி சனிக்கிழமைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும்.அதனை தொடர்ந்து, உதகை நகராட்சிக்குட்பட்ட காந்தல் சிலேட்டர் ஹவுஸ் பகுதியில் ரூ.26.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மைய கட்டடத்தினையும் மற்றும் உதகை ஊராட்சி ஒன்றியம் இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட கரிகாடு மந்து பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட தோடர் பழங்குடியினர் சமுதாயக்கூடத்தினையும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து பார்வையிட்டார்.இந்நிகழ்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சித்ரா, உதகை வருவாய் கோட்டாட்சியர் தடினு அரவிந்த், உதகை நகராட்சி ஆணையாளர் நித்யா, கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அஜித்குமார், சார் பதிவாளர் கௌரிசங்கர், வட்டாட்சியர்கள் சதீஷ்வர நாயக் (உதகை), குணவதி (குந்தா), உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், உதகை நகர்மன்ற உறுப்பினர் அபுதாகீர் உட்பட பலர் உடனிருந்தனர்.

# தேனி மாவட்டம்முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் 35 மனுக்கள் பெற்று, 29 பயனாளிகளுக்கு ரூ. 4.45 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், ) வழங்கினார்

தேனி, ஜூன்.27-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையேற்று தொழில் முனைவோர்களுக்கான கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசுகையில், முன்னாள் படைவீரர்களுக்கான கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெறுவதன் நோக்கம் முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொருவரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனைகளை பெறுவதையே ஆகும். அந்தவகையில் இதுபோன்ற கருத்தரங்கம் நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் குடும்ப வாரிசுதாரர்கள்



கலந்துகொண்டு, சுய தொழில் மேற்கொள்வதற்கு தேவையான பயிற்சிகள் மற்றும் வங்கிக்கடன் விவரங்கள் குறித்து தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்றார்போல் பயிற்சிபெற்று வங்கிக் கடனுதவி மூலம் சுயதொழில் உருவாக்கி கொள்ள வேண்டும். இதன்மூலம் தாங்கள் பயன்பெறுவது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கிட முடியும்.மேலும், மகளிர்கள் சுய உதவிக்குழுக்கள் அமைத்து தொழில்முனைவோராகப் பயன்பெறுவதற்கு மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் வழங்கப்படும் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், இன்று பெறப்பட்ட 35 மனுக்களில் பட்டா மாறுதல், மின் இணைப்பு பெயர் மாற்றம், மின்னணு குடும்ப அட்டை வேண்டுதல், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். தொடர்ந்து, முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் வழங்கும்போது அலுவலர்கள்அதற்கு தனிக்கவனம் செலுத்தி தீர்வு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.வைத்திநாதன், தெரிவித்தார். பின்னர், 10 பயனாளிகளுக்கு ரூ.3,50,000/ கல்வி உதவித்தொகையும், 2 பயனாளிகளுக்கு ரூ.5,383/ மதிப்பிலான வீட்டுவரிச்சலுகை மீளப்பெறுதலுக்கான ஆணைகளையும், 2 பயனாளிகளுக்கு ரூ.7,280/ கண்கண்ணாடி மானியமும், 15 பயனாளிகளுக்கு ரூ.82,500/ மதிப்பிலான தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 29 பயனாளிகளுக்கு ரூ.4,45,163/ மதிப்பிலான அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.இந்நிகழ்வில், மாவட்ட வருவாய்அலுவலர் .ப.ராஜகுமார், உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) லெப்ட் கர்னல் தினேஷ், முன்னாள்படைவீரர் நலக்குழு அமைப்பாளர் .இளையராஜா, விங் கமாண்டர் (ஓய்வு) .கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 18வது வார்டு அங்கன்வாடி மையத்திற்கு நலத்திட்ட உதவி வழங்கல்

மாதவரம், ஜூன்.27-

தமிழக முதல்வர் ச.ஜோசப்விஜயின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு கழக பொதுச் செயலாளரும் அமைச்சருமான என்.புஸ் லிஆனந்த் ஆணைகிங்க திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல்.விஜய்பிரபு வழிகாட்டுதலின்படி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூர் கழக செயலாளர் கே.விஜி உத்தரவின்படி முன்னாள் கைதை கூட்டுறவு சங்க இயக்குநர் ஆர்.சூசைராஜ் ஏற்பாட்டில் 18வது வார்டில் இயங்கிவரும் அங்கன்வாடி மையத்துக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் பிரபாகரன் கார்த்திக், குமார், பத்மநாபன், கணேசன், ராமன், மணிகண்டன், சந்தோஷ்குமார் மோனிஸ், ,டேனியல் உட்பட கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# முடிச்சூரில் தமிழக முதல்வர் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள்

செங்கல்பட்டு, ஜூன் .27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூர் பகுதியில் அமைந்துள்ள அக்ஷியா முதியோர் இல்லத்தில் தமிழக முதல்வர் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் த.சரத்குமார் அவர்களின் ஆலோசணை படி சிறப்பு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அங்கு தங்கியிருக்கும் முதியோர்களுக்கு காலை உணவு வழங்கி அன்பும் மரியாதையும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி தமிழக வெற்றி கழகம் முடிச்சூர் அருள் ஏற்ப்பாட்டில் வழங்கப்பட்டது.





முதியோர்களின் நலன் மற்றும் சமூக பொறுப்புணர்வை முன்னிறுத்தும் வகையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், இல்லத்தில் வசிக்கும் முதியோர் அனைவருக்கும் சத்தான மற்றும் தரமான காலை உணவு வழங்கப்பட்டது. முதியோர்களுடன் நேரம் செலவிட்டு அவர்களிடம் நலம் விசாரித்து வாழ்த்துகளை பகிர்ந்துகொண்டனர். முதியோர்களும் மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சியை வரவேற்று ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்தனர் அதனை தொடர்ந்து முடிச்சூர் பகுதியில உள்ள சி.எஸ்.ஐ பள்ளியில் மாணவர்களுக்கு கல்வி உபகணங்களான புத்தக பை, வாட்டர் பாட்டில், பென்சில், சார்பனர், ரப்பர் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டது.தமிழக முதல்வர் விஜய் அவர்களின் பிறந்தநாளை சமூக சேவை நாளாகக் கொண்டாடும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இத்தகைய சேவைச் செயல்கள் சமுதாயத்தில் மனிதநேயம், அன்பு மற்றும் ஒற்றுமையை வளர்க்கும் வகையில் அமையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். நிகழ்வின் முடிவில் அனைவரும் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் நலனுக்காக வாழ்த்துகளை தெரிவித்தனர்.இதில் பத்மநாபன், குட்டி ஆனந்தராஜ், நந்தகோபால்பைலட், பிரவீன் கௌதம், ஆண்ட்டோ ஜோயல்ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ சென்னை மாவட்டம், மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1435 பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் மாதவரம் வட்டத்திற்கு உட்பட்ட மாதவரம், வட பெரும்பாக்கம், செட்டிமேடு, மாத்தூர், கொசப்பூர், மஞ்சம்பாக்கம், கதிர்வேடு, சூரப்பட்டு, விளக்குப்பட்டு, புத்தகரம்ஆகிய கிராமங்களில் கிராம பொது மக்களுக்கு உரிய குறைகளான பட்டா, உதவித்தொகை, வாரிசு சான்று, சாதி சான்று, மற்றும் இதர சான்றுகள் தொடர்பான மனுக்களை ஜமாபந்தியில் பெற்று நிறைவேற்றி தருவதாக மற்றும் வருவாய் தீர்வாய அலுவலர் ராமச்சந்திரன் உறுதியளித்தார். நிகழ்வின்போது மாதவரம் வட்டாட்சியர் திருவேங்கடம், தலைமை நில அளவையர் செந்தில்நாதன், நில அளவையர்கள்,கிராம நிர்வாக அலுவலர்கள் லெனின், செந்தில் குமார், தேவி, மோகனரங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.




# பழனி அரசு தலைமை மருத்துவமனையில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு

பழனி, ஜூன்.27-

:திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு தலைமை மருத்துவமனையில் உலக போதைப்பொருள் தடுப்பு தினத்தையொட்டி, போதைப்பொருள் இல்லாத ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.நாளைய சமுதாயத்தைச் சீரழிக்கும் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த சிறப்பு நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை மருத்துவர் உதயகுமார் தலைமை தாங்கினார். மனநல மருத்துவர் திருமதி. சசிகலா முன்னிலையில் இந்த விழிப்புணர்வு இயக்கம் நடைபெற்றது.பொதுமக்கள் உறுதிமொழிஇதைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும், "போதைப்பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம்" என்ற நோக்கில் தீர்க்கமான விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். உறுதிமொழி ஏற்பிற்குப் பின், போதைப்பொருட்களால் தனிமனித வாழ்விலும், சமுதாயத்திலும் ஏற்படும் கடுமையான தீமைகள் மற்றும் பாதிப்புகளை விளக்கும் வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை (Placards) கைகளில் ஏந்தி மருத்துவமனை வளாகத்தில் அனைவரும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.மருத்துவர் அறிவுரைநிகழ்ச்சியின் நிறைவாகப் பேசிய தலைமை மருத்துவர் திரு.உதய குமார்,"போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் கொடிய உடல்நலப் பாதிப்புகள், மனநலச் சிதைவுகள் மற்றும் குடும்ப உறவுகளில் ஏற்படும் வீழ்ச்சி ஆகியவை சமூகத்தைப் பேரழிவிற்கு உள்ளாக்குகின்றன. எனவே, போதையில்லா சமுதாயத்தை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் ஒன்றி ணைந்து பாடுபட வேண்டும்" என்று விழிப்புணர்வுடன் வலியுறுத்திக் கூறினார். இக்கூ ட்டத்தில் மருத்துவ மனை ஊழியர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



■ சென்னை, புளியந்தோப்பு குட்டி தம்பிரான் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது, சாமி அலங்காரம் திபாரதனை நடைபெற்று,சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் ஆலய விழா குழுவினர் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது,



# மாதவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி

மாதவரம், ஜூன்.27-

சென்னை மாவட்டம் மாதவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி வட்டாச்சியர் திருவெங்கடம் தலைமையில் வருவாய் தீர்வாயம் எனப்படும் ஜமாபந்தி(பசலி) 1435ல் உள்ள மாதவரம் உள்வட்டத்திற்கு உட்பட்ட புத்தகரம் கிராமத்தை சேர்ந்த சுதாபாஸ்கர் என்பவர் 32வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை முன்னிலையில் வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டி மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் ராமசந்திரன், உதவி அலுவலர்கள் ரவிச்சந்திரன், அர்ச்சனா ஆகியோரிடம் மனுவினை வழங்கினார். பின்னர் மனுதாரர் வழங்கிய மனுவினை பெற்று கொண்டு உரிய நடவடிக்கை எடுப்போம் என்று பயனாளிடம் கூறினார்.

# தேனி மாவட்டம்அரசு அனுமதி பெற்று செயல்படும் குவாரிகள் மற்றும் மணல் குவாரிகளில் சிறப்பு தணிக்கை ஆய்வு - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தகவல்

தேனி, ஜூன்.27-

தேனி மாவட்டத்தில் உள்ள ஐந்து வட்டங்களிலும் அரசு அனுமதி பெற்று செயல்பட்டு வரும் கல்குவாரிகள், மணல் குவாரிகள் மற்றும் சவுடு குவாரிகள் அரசு வழங்கியுள்ள அனுமதி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி செயல்படுகின்றனவா என்பதையும், ஏதேனும் விதிமீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின்படி, தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், துணை ஆட்சியர் தலைமையில் வட்டாட்சியர், மண்டல



துணை வட்டாட்சியர், வட்ட நிலஅளவை அலுவலர், உள்வட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள். இக்குழுவின் பணிகள் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் தலைமையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டும்.தேனி வட்டத்தில் ராஜ்ஸ்ரீ சர்க்கரை வடிப்பாலை அலுவலர் சாந்தி அவர்கள் தலைமையிலும், பெரியகுளம் வட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர் (பொ) கவிதா அவர்கள் தலைமையிலும், ஆண்டிபட்டி வட்டத்தில் தாட்கோ மாவட்ட மேலாளர் சுந்தரராஜன் அவர்கள் தலைமையிலும், போடிநாயக்கனூர் வட்டத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் .நல்லையா அவர்கள் தலைமையிலும், உத்தமபாளையம் வட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர் சையது முகைதீன் இப்ராஹிம் அவர்கள் தலைமையிலும் தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது.இக்குழுக்கள் தங்கள் வட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரசு அனுமதி பெற்று செயல்பட்டு வரும் கல்குவாரிகள், மணல் குவாரிகள் மற்றும் சவுடு குவாரிகளை நேரில் பார்வையிட்டு தணிக்கை மேற்கொண்டு, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் மட்டுமே கனிமங்கள் எடுக்கப்படு கின்றனவா,சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா, அனுமதி நிபந்தனைகள் முழுமையா ககடைபிடிக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள். ஆய்வின்போது ஏதேனும் விதிமீறல்கள் கண்டறியப்பட்டால், அரசின் நடைமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், .தெரிவித்து




# பழிக்குப் பழி வாங்க தாக்குதல் திட்டம்; 4 பேர் கைது

ஸ்ரீவைகுண்டம், ஜூன்.27-

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வாகன தணிக்கையின்போது, தாக்குதல் நடத்தும் நோக்கில் ஆயுதத்துடன் வந்த ஆழ்வார் என்பவரை போலீசார் கைது செய்து ஆயுதத்தை பறிமுதல் செய்தனர்.விசாரணையில், கடந்த ஆண்டு ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக சிவராமமங்கலம் பகுதியைச் சேர்ந்த சிலரை பழிக்குப் பழி வாங்க தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இதுதொடர்பாக அவரது கைப்பேசியை அறிவியல் முறையில் ஆய்வு செய்ததில் கிடைத்த தகவலின் அடிப்படையில், சுதாகர், எசக்கி பாண்டி, முருகன் ஆகிய மேலும் மூன்று பேரை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.மொத்தம் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# தீ வைத்து மரக்கன்றுகள் சேதம்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

மானாமதுரை, ஜூன்.27-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அனுமதியுடன் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் பசுமை செயல் குழு சார்பில் 283 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில், அப்பகுதியில் பொதுமக்கள் கொட்டும் குப்பைகளை அகற்றாமல் துப்புரவு பணியாளர்கள் தீ வைத்து எரிப்பதால் சுமார் 250 மரக்கன்றுகள் சேதமடைந்துள்ளதாக பசுமை செயல் குழுவினர் குற்றம்சாட்டியுள்ளனர்.



இது குறித்து பலமுறை நகராட்சி ஆணையரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மரக்கன்றுகளை சேதப்படுத்திய துப்புரவு பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், இழப்புக்கு நகராட்சி நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் பசுமை செயல் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, 'Start Run Stop Drugs 2026" போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஓட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.சி.அனிதா, மாவட்ட விளையாட்டு நல அலுவலர் நடராஜ முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தவெக அரசைக் கண்டித்து சென்னையில் ஜூலை 7ம் தேதி பேரணி நடத்தவுள்ளதாக விவசாயிகள் அறிவிப்பு!

சென்னை, ஜூன்.27-

தவெக அரசைக் கண்டித்து சென்னையில் ஜூலை 7ம் தேதி பேரணி நடத்தவுள்ளதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர். பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய தவெக அரசை வலியுறுத்தி சென்னையில் விவசாயிகள் பேரணி நடைபெற உள்ளது

# காலிப்பணியிடங்களால் திணறும் ஊராட்சி செயலாளர்கள்: சுகாதார பணிகளும் பாதிப்பு - உடனடி பணி நியமனம் செய்ய கோரிக்கை

மதுரை, ஜூன்.27-

மதுரை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வரும் 420 கிராம ஊராட்சிகளில், ஏராளமான ஊராட்சி செயலாளர் பணியிடங்கள் நீண்டகாலமாக காலியாக உள்ளதால், பணியில் உள்ள செயலாளர்கள் கடும் பணிச்சுமையை எதிர்கொண்டு வருவதாக புகார் எழுந்துள்ளது.குறிப்பாக மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 9 ஊராட்சி செயலாளர் பணியிடங்களும், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் 4க்கும் மேற்பட்ட பணியிடங்களும் காலியாக இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் ஒரே செயலாளர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பை கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.





இதன் காரணமாக குடிநீர், சாக்கடை, குப்பை அகற்றுதல், தெருவிளக்கு பராமரிப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முறையாக கண்காணிக்க முடியாமல் உள்ளதாகவும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்க இயலாத சூழல் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.மேலும், கிராமங்களில் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையும் தீவிரமடைந்துள்ளது. சுமார் 11 ஆயிரம் மக்கள் வசிக்கும் ஒரு கிராமத்திற்கு வெறும் 9 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே இருப்பதால், குப்பைகளை முழுமையாக அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறைந்த ஊதியம் வழங்கப்படுவதால் புதிய பணியாளர்கள் பணியில் சேர ஆர்வம் காட்டவில்லை என்றும், தற்போது பணியில் இருப்பவர்களில் பலர் வயதானவர்களாக உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.இதன் விளைவாக கிராமங்களில் குப்பைகள் தேங்கி சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. கடுமையான பணிச்சுமை காரணமாக சில ஊராட்சி செயலாளர்கள் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டதோடு, உயிரிழந்த சம்பவங்களும் ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவிக்கப்படுகிறது. எனவே, மதுரை மாவட்ட ஊராட்சிகளில் காலியாக உள்ள ஊராட்சி செயலாளர் பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்ப வேண்டும். அதேபோல், மக்கள் தொகைக்கு ஏற்ப துப்புரவு பணியாளர்களை நியமிக்க வேண்டும். நெடுஞ்சாலையோர கிராமங்களில் வெளியூரிலிருந்து வந்து குப்பை கொட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், "இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள் என்றால், அந்த முதுகெலும்பை பலவீனப்படுத்தாமல் பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊராட்சி நிர்வாக வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளனர்.






■ மதுரை மாவட்டம், டாக்டர் எம்.ஜி.ஆர் மாவட்ட விளையாட்டு அரங்கில் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு என்ற உயரிய இலக்கினை வலியுறுத்தும் வகையில் START RUN- STOP DRUGS/ ANTI DRUG RUN 2026 என்ற மாபெரும் விழிப்புணர்வு ஓட்டத்தை மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை , கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சோ.கார்த்திகேயன் மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் நாகராஜன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.முன்னதாக பொதுமக்கள், மாணவ மாணவிகள் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்



■ திருப்பத்தூர் மாவட்ட சுற்றுலா மாளிகையில், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்த தலைவர் இந்திய மனித உரிமைகள் ஆணையம் இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர்.வி.இராமசுப்ரமணியன் (ஓய்வு) மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசூஷ்ய் அனில் வாகரே,இ.கா.ப., (25.06.2026) அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்து, மலர் கொத்து வழங்கி வரவேற்று, கலந்துரையாடினர்.



■ தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட 7வது வார்டு அண்ணாநகர் பகுதியில் உள்ள சாலையில் திறந்து கிடக்கும் வடிகால் மூடி என நாளிதழில் எதிர்மறைச் செய்தி வரப்பெற்றதைத்தொடர்ந்து,மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவின்பேரில், தேனி அல்லிநரகம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சேதமடைந்த வடிகால் மூடி தற்காலிகமாக சரிசெய்யப்பட்டு மூடப்பட்டுள்ளதுமேலும், வடிகால் மூடியை விரைவில் நிரந்தரமாக சரிசெய்ய உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், சர்வதேச போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தல் எதிர்ப்பு தினமான ஜூன் 26ஐ முன்னிட்டு, திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசூஷ்ய் அனில் வாகரே,இ.கா.ப., (25.06.2026) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், கல்லூரி துணை முதல்வர் சண்முகம், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்



■ மதுரை மாநகராட்சி பைக்காரா மெயின் சாலையில் உள்ள கடைகளில் ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., ஆய்வு மேற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக்கூடாது என கடைக்காரர்களுக்கு அறிவுறுத்தினார் அருகில் உதவி ஆணையாளர் ஸ்ரீதேவி , உதவி செயற்பொறியாளர் பாலமுருகன் ஆகியோர் உடன் உள்ளனர்.






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161